ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

बाह्ये निरुद्धेमनसः प्रसन्नता मनःप्रसादे परमात्मदर्शनम् ।
तस्मिन् सुदृष्टे भवबन्धनाशः बहिर्निरोधः पदवीविमुक्तेः ॥

வெளியிலிருக்கும் இந்திரியங்களாகிற வாசற்படியை மூடிவிட்டால், உள்ளிருக்கும் மனதிற்குப் பிரஸாத மேற்படும். அவ்விதமேற்படும் பிரஸாதத்தால், பரமாத்மா தர்சனம் கிட்டும். ஸ்ரீ பரமாத்மா தர்சனம் ஸம்பவித்தால் அதனால் ஸம்ஸார பந்தத்திலிருந்தும் விடு படலாம். ஆகையால் மனதை வெளியில் விடாமல் தடுப்பதே மோக்ஷத்தையடைவதற்கு முக்கிய ஸாதனமாகும்.

நம்மனது வெளியிற்போக வேண்டுமானால் இந்திரியங்களாகிற துவாரங்கள் வழியாய்த்தான் செல்லவேண்டும். அந்த மார்க்கங்களை அடைத்து விட்டால் வெளிவிஷயங்களில் பற்று தலையடையாது. மனதைத் தோன்றியபடி வெளியில் விடுவதாலேயே நமக்குப் பலகஷ்டங்களுண்டாகிறது. அதை ஸ்வாதீனம் செய்து கொண்டால் உத்தம சுகத்தைப் பெறலாம். இக்கருத்தையே ! मन एवमनुष्याणां कारणं बंधमोक्षयो: என்று சான்றோரும்செப்பியிருக்கின்றார். இம்மஹான் கூறியவாறு மனதை வசமாக்கினால் அதெங்ஙனம் சுகத்திற்குக் காரணமாகுமென்பதையும் முறையேதெரிவிக்கிறார். மனதிற்கு விஷயங்களில் பற்றுதலற்று பிரஸாதமேற்பட்டால் (மிகவும் சூக்ஷ்மமான புத்தியால் பரமாத்மாவானவர் அறியப்படுகிறார்.) என்று வேதத்தில் உரைத்துள்ளபடி ஸ்ரீ பரமாத்மாவின் தர்சனம் ஏற்படும். அவர் தர்சனத்தால் நமக்குண்டாகும் பயன் யாதென்றால் ஸம்சாரமெனப்பெயர்பூண்ட ஓர்பந்தத்தில் நாமெல்லோரும் கட்டுண்டு சுதந்திரமாய் நற்காரியங்களைச் செய்ய சக்தி யற்றவர்களாய் இரும்புக் கூட்டிலடைக்கப் பட்ட பறவைகளைப் போல் இவ்விதமென்று கூறமுடியாத பெரும் துயரத்திலிருந்தும் விடு பட்டு மோக்ஷமென்னும் பரம புருஷார்த்தத்தையடைவதற்கு உசிதமான ஸ்தானத்தைப்பெற்று அதிலிருந்தும் சகல துக்கங்களையும் தாண்டி என்றும் அழிவிலாத சுகத்தைப் பெறலாம்,

ஆர்ய தர்மம்.

ருதிரோத்காரி-ஸூ வைகாசி-மீ உருவ

பாதிரிமார் பாடசாலைகளில் பெண்களை அனுப்புவதால் நேரிடும் அனர்த்தம்.

தற்காலம், நமது ஜாதியாசாரங்களெல்லாம் குறைந்து வருகிற விஷயத்தைப் பார்த்து வருந்தும் ஜனங்கள் கடைத்தேற உள்ளபடி பெண்களே காரணமென சொல்லத்துணிவோம். ஏனெனில், ஆண்மக்கள், பல்வேறு பாஷைகளைக் கற்று பலவிதம் மேற்றிசையார் வேடம் பூண்டு தம் மதத்தையும் தமது நடையையும் முற்றிலும் மறந்து, ஆசாரங்களைத் துறந்து, எங்குந்திரிந்து, வீட்டிற் புகுந்து சொக்காய்களையும் கழட்டாது ஆகாரம் எங்கேயென வருங்கால், நமது பெண்மக்கள் அவர்களுக்கு எதிரில் இந்துக்கள் உடைகளையே விடாது பூண்டு தமது மதாசாரத்திற்கேற்பத் திருநீறு திருமண் முதலியவற்றை கொண்டுவந்து வைத்து, அவர் நித்ய கடன்களைக் கழிக்க சுத்த ஜல முதலியவற்றையும், கால் கை கழுவநீரையும் கொண்டுவந்து வைக்கவே அவர்கள் உடையைக் கண்டு தாமும் இந்துக்களென எண்ணியும், அவர்கள் கொண்டுவந்து வைத்த வஸ்துக்களை அவர்கள் பாலுள்ள நேசத்தினாலாவது, தாட்சண்ணியத்தினாலாவது, அத்திரு நீற்றையோ திருமண்ணையோ, மற்றெதையோ தரித்து, வைத்திருக்கும் தண்ணீரைக் கவிழ்த்து, உள்ளத்தில் இன்னும் இவர்களுக்கு வீண் நம்பிக்கை விடவில்லையேயென்று எண்ணியும் அதை வெளிக் காட்டாமல் ஹிந்து வேஷத்துடன் சாப்பிடச் செய்வதும், காலையில் வாசற்படி சுத்தி செய்யுங்கால் ஏதோ விசேஷம் என்று கேட்டு இன்று ஆத்தில் பெரியோர் திதியல்லவாவென்று அவர் எடுத்துரைக்க அறிந்து கொள்வதும் வீட்டில் சாப்பிடுங்கால் இலையில் அகத்திக்கீரையிருப்பதை க்கண்டு இன்று தானா துவாதசியென்பார்களென்பதும், எள்ளும் புல்லும் எடுத்து வைத்தால் இன்று தானா அமாவாசை என்று அறிந்து கொள்வதும் நாம் அறிந்திருக்கி

றோம். இக் காலத்திலும், நமது மதாசார ஜாதியாசாரம் முதலியவற்றிற்கு முற்றிலும் சத்ருக்களான பாதிரிமார் பள்ளிக்கூடங்களில் நாமே நமது பெண்மணிகளை அனுப்பும்படி செய்து அவர்களிடமுள்ள புஸ்தகங்களையே படிப்பிக்க நாம் இடங்கொடுத்தால், கூடிய சீக்கிரத்தில் நமது ஹிந்துமதாசாரம் ஒழிந்து போமென்பதிற் சிறுதும் ஐயமில்லை. "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து' என்பதுபோல் சிறுவயதில் கற்பிப்பது, பச்சைமரத்தாணி போல் ஊடுருவிப்பாயும். ஆதலால், கிறிஸ்து மதப் பழக்கம், நமது ஜாதி மதத்தை அடியுடன் கெடுத்து விடும். இன்னும் இத்தகைய தீயபடிப்பினால் விளையும் இடுக்கண்களையும், கெடுதல்களையும் விரிவே எடுத்துக் கூற இங்கு இடமில்லை. சகோதரர்காள்! ஆகவே, இவ்வாறு அளவற்ற இன்னல்களை விளைவிக்கும் கிறிஸ்து மதப் பாடசாலைகளுக்கு நம் பெண்மணிகளை அனுப்புவது என்ன பேதமை! "முதற்கோணல் முற்றுங் கோணல்" என்பதிற்கிணங்க நமது செல்வப் புதல்விகளை இளமையிலேயே துர்ப் பழக்கத்தில் பழக்கினால் பின்னர் விளையும் அனர்த்தங்களை நீங்களே அறிவீர்கள். ஆதியில் நகத்தால் கிள்ளிவிடுவது, பின்பு கோடரியால் வெட்ட வேண்டுமே. மரத்தின் கோணலை செடியில் நிமிர்த்தினாலன்றி முதிர்ந்த மரமாக வளர்ந்த பின்பு நிமிர்த்துவது அஸாத்யமன்றோ? சிறுமிகளுக்கு, இப்பொழுதே நற்பழக்கங்களை கற்பியாமலிருப்பது மன்றி, முற்றும் சமய விரோதிகளான கத்திரிக் கோல் எண்ணத்தைப் பெற்ற கிறிஸ்தவர் சகவாசமும் செய்வித்து அவர் போதனைக்கும் உட்படுத்தினால், பிறகு நமது பெண்கள் துராசாரம் பெறுவாரென்பதற்கு சிறிதும் சந்தேகமா? ஆகவே கிளியை வளர்த்து பூனைவாயிற் கொடுப்பது போல, மாசற்ற நமது இந்து மக்களை கிறிஸ்தவர்களுக்குத் தொலைத்துவிட்டு, நமது ஜாதிமதாசாரங்களை அறவே துறந்து, தூண்டிலுள்ள இரைக்காசைப் பட்டு, அதைத் தின்ன போன மீன் கதிக்கு ஆளாகாமலிருக்கும் படிக்கு நமது இந்து சகோதர சகோதிரிகளை மிகவும் மன்றாடி நாம் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த விஷயத்தில் மற்றொரு பாகமும் நாம் கவனிக்க வேண்டியதுண்டு. அதாவது முக்காலத்திலுள்ள ஹிந்து மதத்திலுதித்த ஆர்ய சிகாமணிகள் தம் பெண்களை எந்த கலாசாலைக் கனுப்பினார்கள் அவ்விதமனுப் பாததினால் அவர்களுக்கு நேர்ந்தகஷ்டம் யாது? தற்காலம்விசேஷநாகரீகத்திலும் அறிவிலும் சிறந்தவர்களென்று கர்வம் கொண்ட நாம் பாதிரிமார் பாடசாலைகளுக்கு பெண்களை அனுப்பிப் படிக்க செய்வதால் ஏற்பட்ட பயன் என்ன என்று சற்று உற்று நோக்கினால் நம்முடைய ஸநாதனமதக்கோட்பாடுகளிலிருந்தும் விலகுதல், பர்த்தாவினிடத்தில் மரியாதைக்குறைவு, தாம் செல்ல யோக்யமில்லாத இடங்களுக்கெல்லாம் தைரியமாய்ச் செல்லுதல் முதலிய காரியங்களில் பிரவேசித்து தங்களுடைய தர்மத்தை முற்றிலும் இழந்து பிறப்பினால் மாத்திரம் இந்துக் களுடைய வம்ஸத்திலுண்டானோம். என்று சொல்லும் படியான நிலைமைக்குவந்து விட்டார்கள். முற்காலத்திலிவ்விதமில்லை, ஆகையால். இனியாகிலும். நன்கு கவனித்து படிப்பென்று பெயரைவைத்துப் பெண்களைக் கெடுக்காமல், அவர்களுக்குரிய. நல்வழிகளில் செல்லும்படி செய்து ஸ்வதர்மத்திலிருந்தும் நழுவாமல் சிரேயஸ்ஸை யடையும் படி யத்தனிக்க வேண்டுமாய்த் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

லோக குருவின் வருகை.

(௩0௪-வது பக்கத்தொடர்ச்சி.)

இம்மசோதாவைக்கொண்டுவந்திருக்கும் மதிராஸ் கவர்னர் ஸபையிலிருக்கும் மந்திரியவர்கள் தேவஸ்தானங்களிலும் மடங்களிலும் இருக்கிற குற்றங்களையும் சீர்கேட்டையும் வீணான

பணச் செலவையும் கண்டு சகியாது இதற்குஇம்மசோதாவால் தான் ரக்ஷணையேற்படுமென்று நல்ல எண்ணத்துடன் தான் கொண்டு வந்திருக்கிறார். அதை அரசாங்கத்திலு மேற்றுக் கொண்டனர். ஆனால் மந்திரியவர்கள் நினைத்த கெடுதல்கள் காணப்படலாமென்பது சந்தேகமில்லையென்றும் அதை நிவர்த்திக்க இம்மசோதா வந்துதானாகவேண்டுமென்றுமில்லையென்று இப்போது ஆங்காங்கு கூடி ஆஸ்திகர்கள் தீர்மானம் செய்வதுடன் இம்மசோதா சட்டமானால் நம் இந்துமதமே போய்விடுமென்று அழுத்தமாய் நியாயங்களால் கூக்குரலிடவே அச்சத்தம் இமயமலையிலிருக்கும் நம் ராஜப்பிரதிநிதியிடம் கொஞ்சம் விழவே அவர் இம்மசோதாவைச் சட்டமாக்குவதற்குக் கையெழுத்திடவேண்டாம் கொஞ்சம் காலத்தை எதிர்பார்ப்போமென்று மதிராஸ் கவர்னருக்குத்தந்திமூலமறிவித்தனர். இதன் விவரத்தைப் பின் அறிவிப்பாம். இங்கு சொல்லவேண்டியது இது. இம்மசோதா அனுஷ்டானத்திற்கு வந்திருந்தால் இம்மகோத்ஸவம் இவ்விடம் வந்திராது. இம்மகாசார்யாளும் இந்த நிபந்தனைக்குட்பட்டு இப்பீடாதிபதியாய் வீற்றிருக்கமாட்டார்கள்.

M. N. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

உ

இன்பம்.

(௨அ-வது பக்கத்தொடர்ச்சி.)

அன்பர்களே! न सुरां पिबेत् கட்குடிக்கக் கூடாது என்று உரைக்கும் வேதங்களின் அர்த்தங்களை அறியாமலன்றோ நாம் தாரித்திரிய தசையை அனுபவிக்கிறோம். நம்மால் கூறப்படும் தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்னும் நான்கு வகைப் புருஷார்த்தங்களுள் இக்கள்ளருந்தலானது எந்தப் புருஷார்த்தத்தைச் சேர்ந்ததென நாம் கவனிக்குங்கால் வேதங்கள் "சில யாகங்களில் மாத்திரம்

சுரையை இந்திரனின் ப்ரீதியின்பொருட்டு உபயோகிக்கலாமே யொழிய மற்ற எவ்விதகாரணத்தை முன்னிட்டும் அதை உப யோகிக்கலாகாதெனக்கூறுவதால் வேதத்தைப்பிரமாணமாகக் கொண்ட நம்மவரின் மதத்தில் அஃது தர்மமென்னும் புருஷா ர்த்தத்திலடங்கியதன்று. கட்குடித்தவர் புத்தியின் மயக்கத் தால் புலப்பத்துடன் அங்குமிங்குமாடிப் பாடிக்கொண்டு தன் னை மறந்து தன் மடியிலிருந்து சிதரும் ரூபாய்களைக் கவனியா மல் போவதுடன் கட்கடைகளில் இரண்டு அணுவுக்குக்கள்ளரு மயக்கத்தால் தன்னுடைய பற்றுவரவுக்கணக்கில் ரூபாய் கலத்தில் இரண்டுரூபாய்களெனக் கையெழுத்துப்போடுவதால் பணங்கள் வீணாக நஷ்டப்படுவதுபற்றியே அர்த்தமென்னும் புருஷார்த்தத்திலு மடங்கியதன்று. இவ்வாறே மற்றுமுள்ள இரண்டு புருஷார்த்தங்களையும் விளைவிக்கிறதில்லையென யாவ ரும் அறிவார். அவ்விதமிருந்தும் गतानुगतिको लोकः என்ற பழமொழிப்படி உலகம் ஒருவர் செல்லும் வழியை அனுஸரித் துச் செல்லுகின்றது. அஷ்டாங்க ஹிருதயம் முதலிய ஆயுர் வேத சாஸ்திரங்களில் மூத்ரஸம்பந்தமான வியாதிகளை நிவர்த் திசெய்ய சுரை சிறந்ததோர் ஔஷதமென பற்பலவாறாக அதை வர்ணிப்பதானது ஆபத்காலத்தை விஷயீகரிக்கின்றதெ ன யாவருமறிந்ததே. இவ்வாறே சுவர்ணத்தால் செய்யப்ப ட்ட நகை முதலியவைகளைக் களவாடுதலும் மஹாபாபத்தை விளைவிக்கின்றது. முற்காலத்தில் ரூபாய் நோட்டு முதலிய தற்காலத்தில் பழகிவரும் நாணயங்கள் இல்லாமையால் இப்புவி உள்ளமட்டும் எக்காலத்திலும் சுவர்ணமே நாணயமாய் இருக் குமெனக்கருதியே ஆன்றோர்கள் சுவர்ணத்தைத் திருடலாகா தெனக் கூறியுள்ளார். ஆகையால் செம்பு பித்தளை வெள்ளி இவைகளாற் செய்யப்பட்ட பொருள்களையும் திருடலாகாதெ ன்று தெளிவாய் விளங்குகிறது. அன்றியும் திருட்டு என்னும் சப்தத்திற்கு யஜமானனறியாது பொருள்களை அபஹரிப்பதை மாத்ரமர்த்தமாகக் கொள்ளலாகாது. யாவனொருவன் தன்னை நம்பிக்கொடுத்திருந்த பணங்களை மோசம் செய்கிறானோ அவ னும் களவு செய்தவனாவான்.

"वेधा द्वेधा भ्रमं चक्रे कान्तासु कनकेषुच।"

என்ற வடமொழிப்படி பிரமதேவன் நாரிகளிடத்திலும் சுவர்ணங்களிடத்திலும் யாவருக்கும் ஓர் பிரமத்தை உண்டுபண்ணியிருக்கிறார். பாருங்கள்! நகைவேலை செய்யும் தட்டானின் அன்னை ஒருவள் தன் குழந்தையிடம் தனக்கு காப்பு செய்து கொடுப்பதற்காக சில பவுன்களைக்கொடுத்தாள். அவன் கொடுத்ததில் பாதிபவுன்களைமாத்திரம் காப்பாகச்செய்துகொடுத்து மற்றவைகளை தன் வசம் வைத்துக்கொண்டான். ஆயினும் அன்றய இரவில் அவனுக்குத் தூக்கம் வரவில்லை. ஈன்ற தாயையும் வஞ்சித்துவிட்டோமே என்று வியஸனித்துக்கொண்டேயிருந்தான். பிறகு அந்தத்தட்டானும் நடுநிசியில் ஒருவருமறியாது மெல்ல எழுந்திருந்து அன்னையின் கையிலிருக்கும் காப்புக்களைக் கழற்றித் தன்னிடமுள்ள பவுன்களையும் அத்துடன் சேர்த்துப் புதிதாக ஓர் நல்ல காப்பைச் செய்துபோட்டான். ஆகவே காமமானது எவ்விதம் "இந்த ஸ்திரீயைப் புணரலாம், இவளைப் புணரக்கூடாது" என்பதைப் பெரிதும் பாராட்டாதோ அவ்விதமே மனிதருக்கு ஸ்வர்ணத்தினலுண்டான ஆசையும் ஒன்றையும் லட்சியம் செய்யாது. ஆயினும் நாம் எவ்விதத்திலும் அவைகளை விலக்க வழியைத்தேடவேண்டும். இவ்வாறே பசுக்களைக்கொல்லுதலும், பயங்கரமான நரகத்தைவிளைவிக்கின்றது. கொல்லுதல், என்றும் சப்தத்திற்கு சரீரத்தினின்றும் உயிரை வேறுபடுத்துவதை மாத்திரமர்த்தமாகக் கூறலாகாது. எவர்கள் மற்றவர்களுடைய பசுக்களை தாகத்தாலும் பசியாலும் வருந்துங்கால் உபேக்ஷிக்கிறார்களோ அவர்களும், கன்றுகளுக்குப் போதுமான பாலை அருந்தவிடாமற்கறப்பவர்களும், பசியால் மேயும் மாடுகளை ஒட்டுகிறவர்களும் இன்னும் பலவிதமாக ஹிம்ஸை செய்பவரும் பசுக்களைக் கொன்றவர்களாக ஆவர். ரகுவம்சமென்னும் காவ்யத்தில் திலீபமஹாராஜா சுவர்க்கத்திலிருந்து திரும்பி பூமிக்கு வருங்கால் தன்னுடைய ரதத்திலிருக்கும் பைதாக்களின் சப்தத்தால் பசியால் வருந்

தும் காமதேனுவின் தீனமான கூக்குரலைக் கேள்விப்படாமல் சென்றபொழுது காமதேனுவானது "நீ பிள்ளை இல்லாமல் தபிக்கக்கடவாயென" சபித்ததாகக் கூறப்பட்டிருக்கின்றது. தம்முடைய ஞாபகப்பிசகாற்சென்றவருக்கே இவ்விதக் கெடுதி ஏற்படின் புத்திபூர்வமாகப் பசுக்களுக்குக் கெடுதி செய்துளோருக்கு எவ்விதத் துன்பம் நேரிடும் என்பதை நாமே அறிந்து கொள்ளலாம்.

பசுக்களின் ஒவ்வொரு அவயவங்களிலும் ஒவ்வொருதேவதைகள் இருப்பதாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. ருக்வேதத்திலும் அதர்வவேதத்திலும் பசுக்களைப் பூஜித்தலானது மிகப் பிரசஸ்தமெனக் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறே பிராம்மணர்களைக் கொல்லுகிறவர்கள் பிர்மஹத்தி என்னும் தோஷத்தை அனுபவிக்கின்றனர். மனது வாக்கு இவைகளால் அவர்களை ஹிம்ஸித்தாலும் கொல்லுவதற்குச் சமானமே. ஆதலாற்றான் பஞ்சதந்திரமென்னும் நீதி சாஸ்திரத்தில் 1"வேந்தனுக்கு ஆக்ஞையின் பங்கமும், வேதியருக்கு அவமானமடைதலும் ஸ்திரீகளுக்குத் தன் நாதன் தன்னிடம் சேராததும், சாஸ்திரங்களாற் சொல்லாத ஓர் வதமாகு"மெனக் கருத்துடைய,

"आज्ञाभङ्गो नरेन्द्राणां विप्रागामप्यनादरः ।
पृथक् शय्या च नारीणामशस्त्रविहितो वधः ॥

என்னுமோர் ச்லோகமானது கூறப்பட்டிருக்கின்றது. பிரஸ்தாப விஷயத்தில் பிராம்மணர்களைக் கொல்லக்கூடாதென்று கூறியதால் மற்றவர்களைக் கொல்லலாமெனக் கருதலாகாது.

उच्चैर्गतिर्जगति सिद्ध्यति धर्मतश्चेत् ।
तस्य प्रमाचयचनैः कृतकेतरै श्चेत् ॥
तेषां प्रकाशनदशा च महीसुरैश्चेत् ।
तानन्तरेण निपते त्कनु मत्प्रणामः ॥

என்ற ச்லோகத்தால் போஜமஹாராஜா "உலகத்தில் மேன்மைப்பதவியானது தர்மத்தினுற்றான் ஸித்திக்கிறவிஷயத்தில் அது வாஸ்தவமென்பது வேதங்களாற்றான் ஸித்திக்கிறவிஷயத்தில், அவ்வேதங்களின் பொருள்களை உலகின்பொருட்டு நன்குணர்வது வேதியராற்றான் என்று ஏற்படுகிற விஷயத்தில் அவ்வேதியரையின்றி என்போற்றல் எங்கே போய்ச்சேரும் எனக் கூறியுள்ளார். இம்மொழிகளால் ஸர்வஜனங்களுக்கும் உயிரான வேதத்தைப் பரிபாலனம் செய்யும் வேதியர் மேலானவரெனப் புலப்படுகின்றது. ஆகவே அவர்களைக் கொன்றால் யாவரையும் கொன்றவர்களாக ஆவர் எனக் கருதியே வேதங்கள் பிராம்மணரைக் கொல்லக்கூடாதென்று கூறுகின்றன. குறித்தவர் குறிப்பான யாகம் முதலியவைகளைச் செய்வதால் ப்ரீதியுற்ற இந்திராதி தேவர்கள் இப்புவியில் நீர்வளம், நிலவளங்கள் செழித்தோங்கும்படி அருள்செய்கின்றனர். கனவான்களே! வேதியருக்கும் வேதங்கள் அவர்கள் (குற்ற) கற்றிருந்தும் கற்றறியாக் கசடரைப்போல் செய்தால் विदुषो दण्डभूयस्त्वं என்று ஜாஸ்தியாகத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கின்றன.

தற்காலத்தில் கற்றவரும் கற்றறியாக் கசடரைப்போல் ஸத்கர்மாக்களை அனுஷ்டியாததால் ஜாதிவேற்றுமை இருந்தும் பயனற்றுப் போகின்றது. ஆரணப் பொருளின் முகத்திலிருந்து வேதியரும், கைகளிலிருந்து க்ஷத்ரியரும், துடைகளிலிருந்து வைச்யரும், கால்களிலிருந்து சூத்ரர்களுமுண்டானார்கள் என்று புருஷ ஸூக்தத்திற் கூறியிருக்கும் நான்கு வாக்கியங்களால் நன்கு விளங்குகின்றது. ஆகவே அந்த அங்கங்களுக்குரிய இன்றியமையாத சக்தியையும் முறையே ஒவ்வொரு ஜாதியுரும் பெற்றிருக்கின்றனர். ஆதலாற்றான் ஆதியில், வேதியர் வேதமோதுவதையும், க்ஷத்திரியர் போரில் வெற்றியையும், வைச்யர் வ்யாபாரத்தொழிலையும், சூத்ரர் மேல் வர்ணத்தாரின் கைங்கரியங்களையும் அன்புடன் பெரிதும் பாராட்டிவந்தனர். ஆபத்காலத்தில் மாத்திரம் ब्राह्मणोऽपि शस्त्रमाददीत என்னும் வாக்யத்தால் பிராம்மணர்கள் தம்மையும் தம் குடும்

பங்களையும் பாதுகாக்கும்பொருட்டு சஸ்திரங்களையுமெடுக்க லாமென்று ஸ்மிருதிகள் அனுமதி கொடுத்திருக்கின்றன. தற் காலத்திலோவெனின் பிராம்மணர் மற்ற மூன்று வர்ணத்தா ரின் தொழிலேயும், பிராம்மணரல்லாத மூன்று வர்ணத்தார் பிராம்மணர் செய்யும் தொழிலேயுமனுஷ்டித்து வருகின்றனர். ஆகவே ருக்வேதம் முதலிய நம் வேதங்களை ஆராய்ச்சிசெய்து நமக்கு விரோதமான அர்த்தங்களை உரைக்கும் ஆங்கிலேய சீமான்களும் ருக்வேதகாலத்தில் ஜாதிவேற்றுமை கிடையா தென்றும், ஒரே ஜாதியாகத்தான் இருந்ததென்றும், அவ்வொ ரே ஜாதியரே தற்காலத்தில் நான்கு வர்ணத்தார் செய்யும் தொழிலேயுமனுஷ்டித்து வந்தனரென்றும், மற்ற வேதங்களை உண்டுபண்ணினபிற்கு புருஷ ஸூக்தத்தை வேதங்களுடன் கடைசி பாகமாகச் சேர்த்தனரென்றும், ब्राह्मणोऽस्य मुखमासीत् என்னுமிவைபோன்ற மற்றுமுள்ள மூன்று வாகயங்களை ஆதா ரமாகக்கொண்டு புருஷ ஸூக்தமியற்றப் பெற்ற காலத்திற் றான் ஜாதி வித்யா ஸமேற்பட்டுளதென்று மாரவாரம் செய்கி ன்றனர். ஒவ்வொரு வஸ்துவும் ஆரம்பத்தில் எந்த அவஸ்தை யிலிருந்ததோ அதே அவஸ்தையை அந்தியகாலத்திலும் அந்த அந்த வஸ்துக்கள் அடைகின்றனவென்று பிருதிவீ ரூபமான நம் சரீரம் மண்ணுடன் சேருவதாலும், பால்யத்திலுள்ள சில அவஸ்தைகள் தள்ளாத வயதில் அனுஸரிப்பதாலும் தெற்றென பெரும்பாலும் விளங்குகிறது. ஆதலால் ஆங்கிலேய சீமான்க ளின் யுக்தியை இது கடையுகமாதலால் ஆங்காங்கு ஜாதிவேற் றுமை கூடாதென்று உபன்யஸிப்பவர்களையும் ஜாதிவேற்றுமை இருந்தும் தம் தம் தர்மங்களை அனுஷ்டியாமலிருக்கிறவர்களை யும் நோக்குங்கால் உண்மைஎன்று ஒப்புக்கொண்டு மறுபடியும் ஏக ஜாதியாக உலகெங்குமாய் விடுமோவெனத்தோன்றுகிறது. ஆதலால் நாம் ஆரணத்தை அனுஸரித்த ஆரியராயின் ஜாதிவே ற்றுமையை அனுஸரித்து நம் தர்மங்களை அனுஷ்டிக்கக் கட மைப் பட்டிருக்கிறோம். இதுபோல் பசுக்களை ஹிம்ஸிக்கலாகா தெனக் கூறியதால் மற்ற ஜந்துக்களைக்கொல்லலாமெனக்கருத லாகாது. न हिंस्या त्सर्वा भूतानि என்று முத்ஸர்கவாக்யத்தால்

வேதங்கள் நாம் ஒரு ஜீவஜந்துவையும் கொல்லக்கூடாதெனக் கூறுகின்றன. ஆயினும் பசுக்களைக் கொல்லக்கூடாதெனக் கூறியதின் கருத்தாவது, அவைகள் நமக்கு யாகங்களுக்கு உபயுக்தங்களான பால் தயிர் முதலியனவைத் தருவதாலும் ஸர்வதேவதைகளும் அதனுடலில் இருப்பதாலும் அவைகளைக் கொல்லுவதால் எல்லாரையும் கொன்றவர்களாக ஆவோமெனக் கருதியே வேதங்கள் விசேஷித்துக் கூறுகின்றன. யாகத்தில் பசுக்களின் ஹிம்ஸையானது ஹிம்ஸையாகாது. ஒரு ஜீவஜந்துவையும் கொல்லக்கூடாதெனக் கருத்துடைய உத்ஸர்கவாக்யத்தை யாகத்தில் பசு விசஸனம் செய்யலாமெனக் கருத்துடைய **अग्निष्टेमीयं पशुमालमेत** என்னும் விசேஷ சாஸ்திரமானது பாதித்துவிடுகின்றது. அதை ஹிம்ஸை என்று ஒப்புக்கொண்டாலும் "கிணறு வெட்டுகிறவர் கவட்டுவதினால் தன் மேல் படும் சேற்றை அக்கிணற்றின் நீர்களாலே சுத்திசெய்துகொள்ளுகிறானெ"னக் கருத்துடைய வடமொழியிலுள்ள கூபகனன (**कूपखनन**) நியாயத்தை அனுஸரித்து யாகத்திலுள்ள பசு ஹிம்ஸையானது யாகத்தை நிறைவேற்றியதாலுண்டான பெரும் புண்யத்தால் அற்றுப் போகின்றது. வேதத்தைப் பிரமாணமாகக் கொள்ளாமல் யாகத்தில் பசு விசஸனமும் ஹிம்ஸைதானென்று **आहिंसा परमो धर्मः** என்ற வீரவ்ரதம் கொண்ட புத்தர்கள் நாவினுக்கு ருசிகரமான இன்சுவை உண்டிகளை உண்ணும்பொருட்டு காய் கிழங்குகளை வெட்டுவதாலுண்டான தோஷத்தை அனுபவிக்கின்றனர். வேதத்தைப் பிரமாணமாகக்கொண்ட நம்மவரோவெனின்,

" शरीरमाद्यं खलुधर्म साधनम् "

என்று காளிதாஸர் கூறியபடி இவ்வித ஹிம்ஸையைச் செய்து சரீரத்தைப் போஷிப்பினும் தர்மத்தைக் கைக்கொள்ளுவதால் யாதொரு தோஷத்தையுமடையார். இவ்விதமே அன்னியரின் மங்கயரைப் புணருவதும் தன் ஆசிரியரின் அங்கனைகளுடன் ரமித்தலும் இம்மையில் கோரமான ரோகங்களையும் மறுமையில்

நரகங்களையும் விளைவிக்கின்றது. இவ்வித கொடிய பாபங்களை அனேக மரிய நதிகளும் தீர்த்தங்களுங்கூட நிவிர்த்தி செய்ய வல்லமையற்றிருக்கின்றன. குறித்த பாபங்களை விலக்கும் வல்லமையுற்ற சில தீர்த்தங்களோவெனின்,

क्षुद्रेऽपि नूनं शरणं प्रपन्ने ममत्व मुच्चैश्शिरसां सतीव ।

என்னும் நியாயத்தை அனுஸரித்து தம்மிடம் சரணாகதி அடைந்த பாபிகளின் கொடிய பாபங்களைத் தாம் பெற்றுக்கொண்டு பிறகு அப்பாபங்களைத் தாமும் தம்மிடமிருந்து விலக்கிக்கொள்ள வல்லமையற்று, நிவிருத்திசெய்ய வல்லமையுள்ள தீர்த்தங்களை நாடிச் செல்லுகின்றன. இவ்விதம் தானாகவே சுத்தியுடன் கூடிய தீர்த்தங்கள் இக்கொடிய பாபங்களை ஸஹிக்காமல் பரிதபித்து வல்லமையுற்ற தீர்த்தங்களை நாடுகின்றனவென்றால் பிரத்யட்சமாகப் பாபம் செய்துளோர் எவ்வித துயரத்தை அனுபவித்திருப்பார்களென்று நாமே அறிந்துகொள்ளலாம்.

K. M. சுப்பிரமணியசாஸ்திரிகள்.

நாஸ்திகனுக்கு ஓர் சந்நியாசி சொன்ன சமாதானம்.

[பிரம்ம வித்யா]

ஒரு ஊரில் இங்கிலீஷ்படித்த ஒருவன் கடவுளில்லையென்று பிதற்றிக் கொண்டு திரிந்தான். இவனிடம் ஓர் சன்னியாசி வரவே அவரைநோக்கி ஐயா இஃதென்னவேஷம்' கடவுளேது? கடவுளைக் காண்பியும் நான் ஒப்புக் கொள்ளுகிறேன் என்றான். அதற்கவர் அப்பா அப்படி சொல்லாதே, ஜகதீசுவரனை அவ்வளவு எளிதாய்க் காணமுடியுமோ, ஓர் பிரபுவைப் பார்க்க வேண்டுமானாலே மகாப் பிரயாசையாயிருக்கிறதே, மகாபிரபுவாகிய கடவுளைத் தரிசிப்பது வெகு சுலபமோ, ஆகையால் நீ இனி குதர்க்கத்தை யொழிந்து நல்லவழியில் நடவென்றார். அதற்கவன் ஆம்மையா, கேள்விகள் கேட்டால் சரியான சமாதானம்

நாஸ்திகனுக்கு ஓர் சந்நியாஸி சொன்ன ஸமாதானம். நகள

சொல்லத்தெரியாமல் ஆந்தைபோல் விழிக்கிறதும் உளருகிறது மாயிருக்கிறீரேயன்றி வேறில்லை. நல்லது இருக்கட்டும் உம்மை நான் 3. கேள்விகள் கேட்கிறேன். அதற்கு மறுமொழி சொல் லுமென்று அடியில் வருமாறு கேட்கத்தொடங்கினன்.

1. நீர் கடவுளைக் காண்பிக்க முடியுமா? அன்றேல் கடவு ளில்லையென்பதே எனது அபிப்பிராயம்,

2. பிராம்மணனுடைய கையில் அக்கினியிருக்கிறதென்கி றீர். அதைச் சுட்டால் நோகாமலிருக்குமா ? நொந்தால் அக்கினியை அக்கினி எப்படி நோகச் செய்யும்.

3. எல்லாம் ஈசன் செயல், அவனன்றி அணுவுமசையா தென்கிறீர். அப்படியானல் நான் கடவுளில்லை யென்பதால் என்பேரில் என்ன குற்றம். அதுவும் கடவுள் சொல்வதுதானே.

இக்கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்த சன்னியாசி வெகு கோபம் கொண்டு பெரிய மண்ணங்கட்டியை எடுத்து நாஸ்திகன் மார்பில் பலமாக அடித்து அவன் கீழ் விழுந்து எழுந்திருக்கு முன்னே ஓடிப் போனார். நாஸ்திகன் வெகு சிர மப்பட்டு எழுந்திருந்து அவ்வூர் அதிகாரியிடம் பிராது செய் தான். அதில் சன்னியாசி தன்னை மண்ணங்கட்டியாலடித்தத ஞல் மிகவும் நோகிற தென்று கண்டிருந்தான். அதற்குச் சன் னியாசி ஐயா அதிகாரியே! தாங்கள் இந்தப் பையன் எங்கே நோகிறதென்று சொல்லுகிருன். வருத்தத்தைக் காண்பிக்கச் சொல்லுங்கள். என்னை மட்டும் கடவுளைக் காண்பிக்கச் சொல் லி வெகு நாழி போராடினனே. இவ்வலியைக் காண்பிக்கட் டும். இல்லாவிட்டால் இவன் பொய் சொன்னதா யேற்படும். என்ருர். (இன்னும் வரும்.)

பத்திரிகைகளின் வரவும் மதிப்புரையும்.

"சுகாபிவிருத்தினி" இருவாரத்திற்கோர்முறை பிரசுரமாகும் இப்பெயர் கொண்ட பத்திரிகை யொன்று யாம்வரப் பெற்றோம். சுதந்தரம் சகோதரத்துவம், சமத்வம் எனுமிம்மூன்றையுமடிப்படை நோக்கங்களாகக் கொண்டு, இனிய செந்தமிழ் நடையிலெழுதப் பெற்றதுமான பற்பல விஷயங்களைப் படித்துப் பேரானந்த முற்றனம். நமது பாரத நாட்டிலுள்ள ஜனங்களுக்கு சுகங்குன்றி நிற்குமிக்காலத்தில் சுகாபிவிருத்தினி யெனும் இதன் பெயருக்கிணங்க சுகத்தினபிவிருத்தியை நாடியுழைக்கும் இப்பத்திரிகை நம் தேசமக்களுக்கும் பயன்றரத்தக்கதே. இதனையபி மானித்து வாங்கிப் படித்துச் சுகம் பெரும் பொருட்டே போலும் இதன் வருட சந்தா ரூபாய் 2 ஆக நியமித்திருக்கின்றனர். வேண்டுவோர் மானேஜர், சுகாபிவிருத்தினி ஆபீஸ், புதுவை என்ற் விலாசத்திற்கெழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

"ஆரோக்யமும் சிசுவின் சுகவாழ்வும்":—இப்பெயர் தாங்கி ஆங்கில வைத்திய முறைமையில் தேர்ச்சி பெற்ற டாக்டர். அன்னுதாமஸ் அம்மையவர்களால் திருநெல்வேலியில்புதிதாகப் பிரசுரிக்கப்படும் அருமையான முதல் புத்தகம் 1, 2 இவ்விலக்கமுள்ள ஆங்கில-தமிழ் பத்திரிகைகளை முறையே வரப்பெற்று படித்து மகிழ்வுற்றனம். இப்பத்திரிகையில், ஆங்கில வைத்திய வித்யாபட்டதாரிகளான டாக்டர்களால் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதப்பட்டுள்ள சுகாதாரத்திற்குரிய பற்பல அரியவிஷயங்களும், பத்ராதிபரின் குறிப்புகளும், சிசுக்களைப்பரிபாலிக்கும் முறையையும், கர்ப்பிணிகளை ரக்ஷிக்கும் வழியையும் ஒரு சிறிதுமறியாத நமது நாட்டுப்பெண்களனேகருக்கு இன்றியமையாதவை யென நாம் கூறுமலேயே நன்கு விளங்கும். தற்காலத்தில் சென்னையில் எங்கும் பரவும் "சிசுக்களின் சுகவாழ்வும் தாய்மார்களின் ஆரோக்யமும்" என்னுமியக்கத்திற்கு முக்கிய ஊன்றுகோலாய் விளங்கும். மாட்சிமை தங்கிய லேடி வெல்லிங்டனின் உருவப் படத்தையும், அவர்கள், கையொப்ப மிட்ட நற்சாட்சி பத்திரத்தையும், இப் பதிப்பு பெற்றிருக்கின்றதென்பதே

பிள்ளைகளின் சுகாபிவிருத்தியைக் கருதி பொதுநன்மைக்காக உழைக்கும் இப்பத்திரிகை சீக்கிரம் முன்னேற்றமடையுமென்பதற்குத் தகுந்ததோர் அறிகுறியாம். வருடசந்தா ரூபாய் மூன்றே. வேண்டுவோர்,

மானேஜர்,

"ஆரோக்யமும் சிசுவின் சுகவாழ்வும்" ஆபீஸ்

திருநெல்வேலி.

என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋ ❋

க்ஷத்திரியன்:— சநாதந தர்மத்தை யாதரிக்கும் ஓர் தமிழ் பத்திரிகை. இஃது மாதத்தில் இருமுறைப் பிரசுரஞ் செய்யப்படும். கொழுகொம்பில்லாது தவிக்கும் இளங்கொடியே போன்ற நமது சநாதந தர்மத்தைப் பாதுகாப்பதற்கு இத்தகைய பத்திரிகைகள் இன்றியமையாததென்று சொல்லாமலே புலப் படும். பெரும்பாலும் நமது நாட்டின் கண் சநாதந தர்மத்திற்கென்றுழைக்கும் பத்திரிகைகளைக் காண்பது மிகவும் அரிதினும் அரிதாயிருக்கும் இக்காலத்தில் இத்தகைய பத்திரிகை தலையெடுத்திருப்பது சாலவும் போற்றற்பாலது. இப்பத்திரிகையின் தலையங்கத்தினின்றே இதனுடைய பார்க்கிரமும் ஊக்கமும் எத்தன்மைத் தென்பது யாவருக்கும் வெளிப்படை. இக்காலத்திகேற்ப இப்பத்திரிகையில் இடையிடையே தேசீய விஷயங்களும் வெளிவரும். இதனை விரும்புவோர் அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்று சநாதந தர்மத்தையாதரிக்க முயலுவாராக.

சந்தாவிவரம்.— வெளிநாடுக்கு ரூபாய் 4—0—0

உள் நாட்டிற்கு வருஷத்திற்கு 3—0—0

6-மீத்துக்கு 1–12—0

3-மீத்துக்கு 1—0—0

சு. அர்த்தநாரீசவர்மா,

க்ஷத்திரியன் பத்திராதிபர்,

சேலம்.

சரஸ்வதி.— இஃதோர் தமிழ் மாதப் பத்திரிகை. இதில் அநேக நீதி சாஸ்திரங்களும், மதசம்பந்தமான விஷயங்களும் மற்றும் பல ஒப்பற்ற அரிய விஷயங்களும் வெளிவரும். குறைந்த சந்தாவையுடைய இப்பத்திரிகையை எல்லோரும் ஆதரிப்பார்களாக.

வருஷசந்தா உள்நாட்டிற்கு ரூபாய் 1—0—0
வெளியூருக்கு ரூபாய் 1—3—0

சரஸ்வதி சங்கம்
28 பிடாரியார் கோவில் வீதி,
சென்னை.

✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻

கற்பகம்.—ஓர் செந்தமிழ் மாதசஞ்சிகை. இதில் கல்விசாஸ்திரம், வைத்தியம், கைத்தொழில், வேதாந்தம், நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள் முதலான அரிய விஷயங்கள் வித்வத் சிரோமணிகளால் எழுதப்பட்டு வெளிவந்துலவுகிறது.

வருஷசந்தா உள் நாட்டிற்கு ரூபாய் 1—0—0
வெளிநாட்டிற்கு ரூபாய் 1—8—0

மானேஜர். கற்பகம் ஆபீஸ்,
புதுச்சேரி.

✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻ ✻

கலாஸதனம்:— வைத்தியம் யோகம் முதலிய பல அரிய சாஸ்திரவிஷயங்களடங்கிய ஓர் மாதாந்தப் பத்திரிகை மிகப் பெருமை பொருந்திய ஆர்ய சாஸ்திர பாகத்திலும் உய்வதற்கேற்றதால் இலக்கிய விலக்கண லௌகீக வைதீக பிற விஷயங்களினும் புதை பொருளாய் கிடப்பனவற்றைத் துருவியெடுத்துப் பலருக்கும் பயன் படுமாறு நன்குதுலக்குமிப் பத்திரிகையை அவசியம் ஆதரிக்கவேண்டுமென எமதபிப்பிராயம்.

இதன் வருடசந்தா உள்நாட்டிற்கு ரூபாய் 6—0—0
வெளிநாட்டிற்கு ரூபாய் 7–12—0

வேண்டுவோர், மானேஜர், "கலாஸதனம் ஆபீஸ்"
திருவகீந்திரபுரம், [Via] திருப்பாப்புலியூர்,
தென்னார்காடு ஜில்லா.

என்ற விலாசத்திற்கெழுதிப் பெற்றுக் கொள்ளவும்.